# வள்ளலார் நிறுவிய சத்திய ஞானசபை
## (பகுதி 1)

வள்ளலார் வடலூரில், தருமச் சாலையில் தங்கியிருந்தபோது, அவர் முன்னால் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் தோன்றி, ஞானசபை நிறுவுமாறு ஆணையிட்டார். மேலும் அதற்குத் தேவையான பொருளையும் அய்யா அவர்களுக்குக் கொடுத்தருளினார்.

ஜாதி, மதம், சமயம் முதலிய எந்த பேதமுமின்றி, எல்லோரும் ஒன்றுபட்டு வழிபாடு செய்யவும், ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய நெற்றிக்கண் திறக்கப் பெற்று, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம், அகந்தை, இடம்பம் ஆகிய எட்டுத் திரைகளும் தவிர்க்கப்பெற்றால், மனமாகிய கண்ணாடியில் ஒளியாகிய ஆண்டவனைத் தரிசிக்கலாம் என்ற ஞான அநுபவத்தை உணர்த்தும் பொருட்டு, அய்யா அவர்கள் 1871ல் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபையை நிறுவத் தொடங்கினார்கள்.

வள்ளலார் அமைத்த ஞானசபை, முற்றிலும் புதுமையாக, எட்டு கோணமாகவும், திறந்த மூன்று வாயில்கள் உள்ளதாகவும், 16 அடி சுற்றுவட்டத்தில் ஒரு பாதாள அறையும், அதன் மேல்புறத்தில் ஒரு மேடையும், அதன் மேல்பகுதியில் கல்தூண் போன்ற ஒரு கம்பமும், அதில் பிறை போன்ற ஓர் அமைப்பும், அந்தப் பிறையின்மேல் ஓர் அகல் விளக்கின் உருவமும், அதில் எண்ணெய் ஊற்றி திரிபோட்ட விளக்கும், அதற்கு முன்னால் ரசம் பூசிய ஒரு நிலைக்கண்ணாடியும், அந்த நிலைக்கண்ணாடியின் நான்கு புறத்திலும் இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டு, நான்கு புறத்திலும் ஏழு வண்ணங்கள் உள்ள திரைகள் தொங்கவிடப் பட்டிருந்தன. தெற்குப் பக்கமுள்ள திரைக்கு முன்னால், விளக்கின் கீழ்புறத்தில் நீல நிறத்தில் உறைபோடப்பட்ட "எழுதா மறை" என்ற புத்தகத்தை ஒரு பெட்டியில் வைத்திருந்தார்கள்.

ஞானசபையின் வெளிப்புறத்தில், வேதியியல் முறையில் சுருக்குக் கொடுத்த இரும்புச் சங்கிலியில் 21600 வளையங்கள் அமைத்து, ஞான சபையைச் சுற்றி வேலிபோல் அமைத்திருந்தார்.

சபைக்குத் தென்கிழக்காக ஒரு எழுவார் மேடையும், அதன் கிழக்கில் ஒரு கொடிமரமும் அமைத்தார்கள். ஞானசபையின் மேற்கூரை தாமிரத் தகடுகளால் போர்த்தப் பெற்றது. ஞானசபையின் கும்பம் பன்னீர் செம்பு போன்ற வடிவத்தில் அமைக்கப் பெற்று அதன் உள்ளே ஒன்பது வகையான இரசமணிகள் வைக்கப்பட்டிருந்தன.

(தொடரும்)

டாக்டர் ஆறுமுகம், வட மலேசிய பல்கலைக் கழகம்.

# வள்ளலார் நிறுவிய சத்திய ஞானசபை
## (பகுதி 2)

சத்திய ஞான சபை அமைப்பிலுள்ள தத்துவங்களை அறிவோம் :-

(அ) எட்டு கோணங்கள்: காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சர்யம், அகந்தை, இடம்பம் ஆகிய எட்டு விகாரத் தத்துவங்களால் சூழப் பெற்றவன் மனிதன்.

(ஆ) திறந்த மூன்று வாயில்கள் : சத்துவம், ராஜசம், தாமசம் ஆகிய முக்குணங்கள். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள். அக்கினி (தொப்புளின்கீழ்) சூரியன் (கழுத்துக்குக் கீழே தொப்புளுக்கு மேலே); சந்திரன் (கழுத்துக்கு மேலே) ஆகிய மூன்று மண்டலங்கள். வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்று பிணிகள்.

(இ) 16 அடி சுற்று வட்டத்திலுள்ள பாதாள அறை : மனித உடலில் தச நாடிகளான 1. இடகலை; 2. பிங்கலை; 3. சுழுமுனை; 4. சிகுவை; 5. புருடன்; 6. காந்தார்; 7. அத்தி; 8. அலம்புடை; 9. சங்கினி; 10. குகு ஆகியவற்றோடு 1. மூலாதாரம்; 2. சுவாதிஷ்டானம்; 3. மணிபூரகம்; 4. அநாகதம்; 5. விசுத்தி; 6. ஆக்ஞேயம் ஆகிய ஆறு ஆதாரங்களையும் சேர்த்து பதினாறு ஆகும்.

(ஈ) மேற்புறத்தில் உள்ள மேடை : ஆக்ஞேயம் என்னும் திருச்சிற்றம்பலம்.

(உ) கல்தூண் : உச்சிக்குக் கீழே உண்ணாவுக்கு மேலேயுள்ள பிரம்ம ரந்திரம் என்னும் நுண்ணிய துவாரம்.

(ஊ) பிறை போன்ற, வடிவம் : இது ஞானமார்க்கத்திற்குரிய சந்திர கலையைக் குறிக்கின்றது.

(எ) அகல்விளக்கு : இது, தீப வடிவில் இறைவன் இருக்கிறார் என்பதைக் குறிக்கிறது. அதாவது, நம் ஜீவனின் வடிவம் சிவலிங்க வடிவ ஜோதி சொருபமானது என்பதைக் குறிக்கின்றது.

(ஏ) நிலைக்கண்ணாடி : நம்முடைய சூக்குமசரீரத்தை நாம் நேருக்கு நேராகக் காண முடியும் என்பதை விளக்குவது.

(ஐ) 21600 இணைப்புகள் உள்ள இரும்புச் சங்கிலி : நம் நாசித் துவாரங்களின் வழியாக உள்ளே சென்று வெளிக்கழியும் சுவாசத்தின் எண்ணிக்கை ஒரு நாளைக்கு சரா சரியாக 21600 என்பதைக் குறிக்கிறது.

(ஒ) ஏழுவண்ணத் திரைகள் : 1. நிலம் = சுவாதிஷ்டானம் = மஞ்சள் நிறம்; 2. நீர் = மணிபூரகம் = வெண்மை நிறம்; 3. தீ = அநாகதம் = சிவப்பு நிறம்; 4. காற்று = விசுத்தி; =நீல நிறம். 5. ஆகாயம் = ஆக்ஞேயம் = கறுப்பு நிறம் 6. மூலாதாரம் = (மஞ்சள் + நீலம்) = பச்சை நிறம்; 7. சகஸ்ராரம் = ஐந்து நிறமும் கலந்துள்ள திரை.

இத்தகைய அற்புதமான ஞான சபை, 1871ல் கட்டிமுடிக்கப்பெற்றது. சிவபெருமான் வாக்கின்படி சிவ பெருமானுக்காகக் கட்டப்பெற்ற ஞானசபையை நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்க, 25. 1. 1872ல் திறப்பு விழா செய்ய அய்யா அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். ஆனால், முதல் நாள் 24.1.1872 அன்று, விழாவிற்காகப் போட்டிருந்த பெரிய கீற்றுப் பந்தல் விரோதிகளால் தீவைத்துக் கொளுத்தப்பட்டது. இராமலிங்கர் தமது தவ வலிமையால், தாம் அமர்ந்த இடத்திலிருந்தே தீயை அணைத்து, மறுநாள் விழாவை நடத்தி முடித்தார்கள்.

*டாக்டர் ஆறுமுகம், வட மலேசிய பல்கலைக் கழகம்.*